**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம் (மேலதிக நிதியளிப்பு) - சனவரி 01 முதல் 2021 ஒக்தோபர் 15 வரையிலான காலப்பகுதிக்கான**

---

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் (மேலதிக நிதியளிப்பு) சனவரி 01 முதல் 2021 ஒக்தோபர் 15 வரையிலான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 செப்தெம்பர் 05 ஆந் திகதிய 5768 எல்கே ஆம் இலக்க கடன் மற்றும் மானிய நிதியளிப்பு உடன்படிக்கைக்கான பொது நிபந்தனைகளின் 4:09(ஆ) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளுதம் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் விவசாய மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் கடல்நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தற்போதைய நீர்ப்பாசன அமைச்சு என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. காலநிலை ஆபத்தால் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்தல் மற்றும் இடர்களை திறம்பட எதிர்த்து செயலாற்றுவதற்கான இயலளவை மேம்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலதிக நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6,048 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 42 மில்லியனாக உள்ளதுடன் முழுத்தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 15 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 ஒக்தோபர் 15 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான செலவினக்கூற்று மற்றும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

2. பௌதீக செயலாற்றல்

2.1 ஒப்பந்த நிருவாகம்

| இல. | | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | (i) | ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் பதுளை மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட எட்டு அபிவிருத்தி செயற்திட்டத்தின் 5 சதவீதமான பிடித்து வைக்கும் பணம் குறைபாடுகளை தீர்ப்பதற்கான கடப்பாட்டு காலப்பகுதியினுள் விடுவிக்கப்பட்டிருந்தது. பிடித்து வைக்கும் பணத்தின் பிணை உத்தரவாதம் 2020 திசம்பர் 01 இல் காலாவதியாகிய போதிலும், பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம், குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரமும் நிதி வழங்கும் முகவர்களின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யவும் பிடித்து வைக்கும் பணத்தின் உத்தரவாதத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் பிடித்து வைக்கும் பணம் விடுவிக்கப்பட்டுள்ளது. | பிடித்து வைக்கும் பணத்தினை விடுவிப்பதற்கு முன்னர் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (ii) | தள ஆய்வினை மேற்கொள்வதற்கு தொடர்புடைய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் பிடித்து வைக்கும் பணத்தின் பிணை உத்தரவாத காலப்பகுதியினை நீடிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | பிடித்து வைத்தல் பண உத்தரவாதத்தினை விடுவிப்பதற்கு முன்னர் ஒப்பந்ததாரர்கள் அவற்றினை அவர்களது சொந்த கிரயத்தில் சரிசெய்தனர். | |
| (ஆ) | | உடன்பட்ட BOQ வில் வேண்டப்பட்ட விபரக் குறிப்புகளின் பிரகாரம், கொங்கிறீட் வடிகாணில் 150 மில்லிமீற்றர் தடிப்பத்தினை பேணாமை காரணமாக செல்லக்கதிர்காமம் - கிரிவெகர பாதையில் இரு பக்கங்களினதும் அபிவிருத்திக்கான பெரிய மூடிய கால்வாய் (Culvert) மற்றும் அரிப்புக்கான வடிகாண் முறைமைகளின் நிர்மாணிப்புக்கள் மீதான 4 மில்லியன் கொடுப்பனவு தொகையொன்று நிறுத்தப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் குறைபாடுகளை தீர்ப்பதற்கான கடப்பாட்டு காலப்பகுதி 2021 ஒக்தோபர் 31 அன்று காலாவதியாகியிருந்தது மற்றும் உரிய குறைபாடுகள் 2021 திசம்பர் 15 வரையிலும் சீர்செய்யப்பட்டிருக்கவில்லை. நிர்மாணிப்பின் தன்மை காரணமாக அந்த குறைபாடுகள் திருத்தம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டன என்று பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. அதனை கருத்திற் கொள்ளாமல் இடைநிறுத்தப்பட்ட பணமானது அரச வருமானத்திற்கு செலவு | குறைபாடுகள் சீர்செய்யப்படும் வரை இடைநிறுத்தப்பட்ட பணம் பொது வைப்பு கணக்கில் வைப்பு செய்யப்பட்டது. குறைபாடுகள் சீர்செய்யக்கூடிய நிலைமையில் காணப்படாமை காரணமாக வைப்பு செய்யப்பட்ட தொகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் இருந்து சிக்கனமற்ற பெறுமதியினை மீள அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்படாமல் ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வைப்பு செய்யப்பட்டது. | | |
| (இ) | ரூபா 182.2 மில்லியன் பொருட்கணிய சிட்டை (BOQ) பெறுமதியினைக் கொண்ட 03 ஒப்பந்த பொதிகள் 2017 முதல் 2019 வரையிலான காலப்பகுதியின் போது ரூபா 39 மில்லியன் தொகையினை கொடுப்பனவு செய்ததன் பின்னர் நிறுத்தப்பட்டன. ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், தொடர்புடைய ஒப்பந்ததாரருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மற்றும் மிகுதி வேலையினை பூர்த்தி செய்வதற்கான மாற்று நிதி ஒழுங்குகளை அறிமுகப்படுத்தாமல் வெளிநாட்டு கடன் நிதி வழங்கல் 2021 ஒக்தோபர் 15 அன்று நிறுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவாக, ரூபா 39 மில்லியன் வீணான செலவாக ஆகியிருந்தது. | ஒப்பந்ததாரரின் மோசமான செயல் முன்னேற்றம் காரணமாக மேற்குறிப்பிட்ட ஒப்பந்தம் நிறுத்தப்பட்டுள்ளது. ஒப்பந்தம் நிறுத்தப்படும் போது மொத்த வேலையில் 3.9% சதவீதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மிகுதி வேலையானது ரூபா 59.47 மில்லியன் பெறுமதிக்கு முன்னேற்ற செயற்திட்டத்தின் (CRIB) கீழ் ஊழியப் படைக்கணக்கு ஒப்பந்தமொன்றாக செய்யப்பட்டது மற்றும் 95% சதவீதமான வேலை நிறைவுற்றுள்ளது. வேலையின் மிகுதி 5% சதவீதமானவை 2022 ஆம் ஆண்டில் MASL வருடாந்த பாதீட்டின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் இருந்து சிக்கனமற்ற பெறுமதியினை மீள அறவீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | நிதி உடனபடிக்கையின் பிரகாரம், வெள்ள அபாய குறைப்பு கூறின் கீழ் ஐ.அ. டொலர் 26 மில்லியன் காணப்பட்ட போதிலும், மேற்குறிப்பிட்ட கூறின் கீழ் ஐ.அ. டொலர் 27.39 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவாக, முறையான அங்கீகாரமின்றி ஐ.அ டொலர் 1.39 மில்லியன் விஞ்சி காணப்பட்டது. | பெறுகை திட்டம் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்பட்டு உலக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஒருமுறை உலக வங்கியானது (WB) பெறுகை பரிமாற்றத்தின் முறையான கண்காணிப்பின் ஊடாக பெறுகை திட்டத்திற்கு அங்கீகாரத்தினை வழங்கியது. மேற்குறிப்பிட்ட வேறுபாட்டிற்கான முறையான அங்கீகாரமாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. | முறையான அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | ஒப்பந்த பொதி இலக்கம் CRIB/AF/WORKS/ID-AMP/NCB/97 இன் 2.3 ஆம் இலக்க உருப்படியின் கீழ் ரூபா 15 மில்லியன் செலவு செய்து அக்கரைப்பற்று பிரதேசத்தின் வீரக்கடி பிரிவின் கழியோடையில் நிர்மாணிக்கப்பட்ட தடுப்பு சுவர் மோசமான நிர்மாணிப்பு வேலை காரணமாக வெடித்துள்ளதுடன் 03 அங்குலங்கள் முன்னோக்கி தள்ளப்பட்டுள்ளது. | வலுவூட்டப்பட்ட கொங்கிறீட் பாதகாப்பு பிணைப்புக்களின் நிர்மாணிப்பில் வெடிப்பு விருத்தி அடைந்து காணப்பட்டது. நிலைக்குத்தான இரு பக்க சுவர் 03 இடங்களில் வலுவூட்டப்பட்ட தூண்களுடன் பிணைக்கப்பட்டிருந்தது. இது ஒப்பந்ததாரரினால் முழுமையாக சீர்செய்யப்பட்டது. தற்போது வெடிப்புக்களில் எவ்வித விருத்தியும் இல்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து சேதங்கள் மீள அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | நெல்லிக்காடு வடிகாண் கால்வாயில் உள்ள நெல்லிக்காட்டின் முதலாவது மற்றும் இரண்டாவது அணைக்கட்டிற்கான மேம்படுத்தல்கள் மற்றும் சம்மாந்துறை பிரதேசத்தில் உள்ள J பிரிவின் கீழ் ரூபா 2.3 மில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியினைக் கொண்ட 07 கால்வாய் இறக்க (Drop) கட்டமைப்பு மற்றும் 01 மூடிய கால்வாய் (Culvert) பெட்டி என்பவற்றை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் தவறியிருந்தார். அதனை கருத்திற்கொள்ளாமல் வேலை பூரணப்படுத்தியமைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக ஒப்பந்தத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் பூர்த்திசெய்யப்படவில்லை. | எதிர்பாராத விதமாக அது ஒரு வடிகால் நதியாக காணப்படுவதனால் பெரும்பாலான நேரங்களில் வடிகால் ஓட்டம் காணப்பட்டது. மேலும், வடிகால் இறக்க (Drop) கட்டமைப்புக்கள் C6 கால்வாயில் நிர்மாணிக்கப்பட வேண்டும் மற்றும் தண்ணீர் பிரச்சினையின் போது தொடர்புடைய நிர்மாணிப்புக்களை ஒப்பந்ததாரரால் செய்ய முடியாதிருந்தது. பருவகாலம் இல்லாத காலங்களிலும் கூட அதிக தடவைகளில் பலத்த மழை பெய்தது. செயற்திட்டம் முடிவடைவதற்கு முன்னர் கால்வாய் இறக்க கட்டமைப்புக்களை விரைவுபடுத்துவதற்கு மற்றும் பூர்த்தி செய்வதற்கு உண்மையான கள நிலவரம் சாதகமானதாக காணப்படவில்லை. | சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் இருந்து சிக்கனமற்ற பெறுமதியினை மீள அறவீடு செய்ய வேண்டும். |
| (எ) | ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு சரிவினை சீர்செய்யும் வேலைகளுடன் தொடர்புடைய மூன்று ஒப்பந்த பொதிகள் உடன்பட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் உத்தரவாத பிணையினை பெற்றுக் கொண்டதன் பின்னர் சான்றுப்படுத்தப்பட்ட பூர்த்தி செய்யப்பட்டிருக்காத வேலைகளுக்கு ரூபா 11 மில்லியன் தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 2021 மே 31 அன்று உத்தரவாத பிணை காலாவதியாகியிருந்த போதிலும், ஒப்பந்ததாரரினால் மிகுதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | மிகுதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்ததாரர் செல்வாக்கு செலுத்த வேண்டும். |